

நேற்று (28.08.2024) சென்னை, எழும்பூர், அரசு அருங்காட்சியக கலையரங்கில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன் அருங்காட்சியகங்கள் துறை சார்பில், பெருநகர சென்னையின் பெருமை பேசும் கொண்டாட்டங்கள் தொடர்பான, "பண்பாடு – ஒரு மீள்பார்வை" என்ற கருத்தரங்கை துவக்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தர மோகன், அருங்காட்சியகங்கள் துறை இயக்குநர் திருமதி கவிதா ராமு மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திரிபுராவில் கனமழை!

அகர்தலா, ஆக. 29–

வடகிழக்கு மாநிலங்களில் ஒன்றான திரிபுராவில் முன்னெப்போதும் இல்லாத வகையில், கடந்த வாரம் 19ந்தேதி முதல் கனமழை பெய்து வருகிறது. தொடர்ந்து 5 நாட்கள் பெய்த கனமழையால், பல பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

எனினும், 24ந்தேதி முதல் மழை சற்று குறைந்தது. ஆனால், வெள்ளம் தொடர்ந்து குடியிருப்பு பகுதிகளை சூழ்ந்து மக்களின் வாழ்க்கையை பாதித்தது.

கனமழை மற்றும் வெள்ளத்திற்கு 31 பேர் பலியாகி விட்டனர். இதனை திரிபுரா நிவாரண, புனரமைப்பு மற்றும் பேரிடர் மேலாண் துறை தெரிவித்து உள்ளது.

திரிபுராவில், 492 நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டு, வெள்ள பாதிப்புக்கு ஆளான மக்களுக்கு புகலிடம் வழங்கப்பட்டு உள்ளது. எனினும், வெள்ள பாதிப்பினால், 72 ஆயிரம் பேர் தங்களுடைய இடங்களை விட்டு வேறு இடங்களுக்கு புலம்பெயர்ந்து சென்றுள்ளனர்.




கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி மற்றும் விஷ்வாஸ் பள்ளியின் தலைவர் திருமதி.கமலா காந்தி ஆகியோரின் ஐம்பதாவது திருமண நாளை முன்னிட்டு இராணிப்பேட்டை விஸ்வாஸ் பள்ளியில் 25 மாற்றுத் திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் வழங்கினார்கள். மற்றும் மாவட்ட ஆட்சியர் ஜெ.யு.சந்திரகலா, இராஜேஸ்வரி மருத்துவமனை டாக்டர் ராஜேஷ்வரி, ஷீலா வினோத் காந்தி, சங்கீதா சந்தோஷ், மாவட்ட மாற்றுத்திறனாளிகளின் நல அலுவலர் பூ.சரவண குமார் மற்றும் கழகத்தினர் உடனிருந்தனர். விழா முடிவில் தலைமை ஆசிரியர் ஆர்.சரண்யா நன்றியுரை ஆற்றினார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் கண்ட கனவை

# முதல்வர் மு.க.ஸ்டாலின் நிறைவேற்றி வருகிறார்!

### அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!



திண்டுக்கல், ஆக. 29-

தமிழகத்தில் அனைவருக்கும் வீடு என்ற முத்தமிழ் அறிஞர் கலைஞர் கண்ட கனவை நிறைவேற்றியவர் திராவிடமாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்று ஆத்தூர் ஒன்றியம் பிள்ளையார்நத்தத்தில் கலைஞரின் கனவு இல்ல திட்ட வீடுகளுக்கான பூமி பூஜை விழாவில் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் பேசியதோடு ஆத்தூர் ஒன்றியத்தில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட 1200 கலைஞரின் கனவு இல்ல திட்ட வீடுகள் 3மாதத்தில் பூர்த்தி அடையும் என உறுதியளித்தார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியத்தில் உள்ள ஆத்தூர் கிழக்கு மற்றும் மேற்கு ஒன்றியத்தில் 22 கிராம ஊராட்சிகள் உள்ளன. 22 கிராம ஊராட்சிகளை சேர்ந்த 1200 பயனாளிகளுக்கு கலைஞரின் கனவு இல்ல திட்டம் மூலம் வீடுகள் கட்டுவதற்கான ஆணைகள் வழங்கப்பட்டது. ஆத்தூர் கிழக்கு ஒன்றியம் பிள்ளையார் நத்தத்தில் உள்ள ஆதிதிராவிடர் காலனியில் வசிக்கும் பயனாளிகளுக்கு வீடுகள் கட்டுவதற்கான பூமி பூஜை விழா நடைபெற்றது.

விழாவிற்கு மாவட்ட ஆட்சியர் மொ.நா.பூங்கொடி தலைமை தாங்கினார். திட்ட இயக்குநர் பெ.திலகவதி, மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் பாஸ்கரன், ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன், ஒன்றிய செயலாளர்கள் பாறைப்பட்டி ராமன், பிள்ளையார்நத்தம் முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஊராட்சி மன்ற தலைவர் உலகநாதன் வரவேற்று பேசினார்.

விழாவில் பயனாளிகளின் வீடுகளுக்கு சென்று பூமி பூஜையில் கலந்துவிட்டு பொதுமக்கள் மத்தியில் பேசிய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள், கடந்த 10ஆண்டுகளுக்கு முன்பு முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் கண்ட கனவான அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தை நமது திராவிடமாடல் ஆட்சி நாயகன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிறைவேற்றி யுள்ளார்கள்.

இந்த வருடத்தில் ஒரு லட்சம் பயனாளர்களுக்கு கலைஞரின் வீடு வழங்கும் திட்டம் மூலம் வீடுகள் வழங்குவதற்கான ஆணை வழங்கப்பட்டு வீடுகள் கட்டி முடிக்கப்படும். வரும் ஆண்டுகளில் தொடர்ந்து பயனாளிகளை தேர்வு செய்து 8லட்சம் வீடுகளை வழங்க திட்டமிட்டுள்ளோம். இது ஊரக வளர்ச்சித்துறையின் மாபெரும் சாதனையாகும் என்றார். மக்களுக்கான மக்களாட்சி நடத்தி வரும் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் அனைவரும் சமம், அனைவருக்கும் எல்லாம் என்ற நிலை உருவாகியுள்ளது.

வளமான வளர்ச்சியான தமிழகம் உருவாகி படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லம் தேடி வருகிறது. இளைஞர்களின் எழுச்சி நாயகன் தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுதுறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சீரிய செயல்பாட்டால் கிராமப்புற இளைஞர்களும் விளையாட்டு துறையில் இந்திய அளவில் சாதனைபடைக்கும் அளவிற்கு முன்னேறியுள்ளார்கள் என்றார்.

நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர் பிலால்உசேன், ஆத்தூர் மார்கிரேட்மேரி, பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, ஆத்தூர் தாசில்தார் வடிவேல்முருகன், ஆத்தூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தட்சிணாமூர்த்தி, அருள்கலாவதி, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மனலூர் மணிகண்டன், அகரம் பேரூராட்சிமன்ற தலைவர் நந்தகோபால், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், தி.மு.க. நிர்வாகி அம்பை ரவி, மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் குமரேசன், துணை அமைப்பாளர்கள் பஞ்சம்பட்டி மணி, விவேகானந்தன், விடுதலை முருகன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், மாவட்ட ஊராட்சிகுழு உறுப்பினர் பத்மாவதி ராஜகணேஷ், ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக அவைத்தலைவர் சிவக்குமார்,

துணைச்செயலாளர்கள் எம்.சி.பாண்டியன், வசந்தா கென்னடி, ஆலமரத்துப்பட்டி ராஜேந்திரன், பொருளாளர் கருப்பையா, மாவட்ட பிரதிநிதி தங்கவேல், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் கணேசன், வீரக்கல் காங்கேயன், ஒன்றிய கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் பாறைப்பட்டி முருகன், மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன், பேரூர் கழக செயலாளர் சின்னாளபட்டி மோகன்ராஜ், சித்தையன்கோட்டை சக்திவேல், அய்யம்பாளையம் தங்கராஜ், சின்னாளபட்டி பேரூராட்சிமன்ற தலைவர் பிரதீபா கனகராஜ், துணைத் தலைவர் ஆனந்தி பாரதி ராஜா, ஒன்றிய குழு உறுப்பினர்கள் வண்ணம்பட்டி காணிக்கைசாமி, வீரக்கல் செல்விகாங்கேயன், ஜோதி மயில்சாமி, சிந்தாமணி நாகசுந்தரம், பாப்பாத்தி, நாகவள்ளி, ஊராட்சிமன்ற தலைவர்கள் ஆத்தூர் ஐ. ஜம்ருத்பேகம், செட்டியபட்டி ராஜா, பஞ்சம்பட்டி பாப்பாத்தி நாகராஜன், அம்பாத்துரை சேகர், பிள்ளையார்நத்தம் வாஞ்சிநாதன், வீரக்கல் ராஜேஸ்வரி தங்கவேல், சீவல்சரகு ராணி ராஜேந்திரன், அரசு ஒப்பந்ததாரர் ஜீசஸ் அகஸ்டின், மெல்வின், தி.மு.க. நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

# தூத்துக்குடி தெற்கு மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கை!



தூத்துக்குடி, ஆக. 29-

தூத்துக்குடி தெற்கு மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் ஆறுமுகநேரி அன்னை எஸ்.பி.ஹாலில் 01.09.2024 அன்று நடைபெறுகிறது என மாவட்டச் செயலாளர், அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

தி.மு.க தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாவட்டக் கழக செயலாளர்களின் கூட்ட முடிவின்படி தமிழ்நாடு முழுவதும் மாவட்ட அளவில் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்று வருகிறது.

அதன் ஒரு பகுதியாக கழக தலைவர் அவர்களின் அறிவுரையை ஏற்று தூத்துக்குடி தெற்கு மாவட்ட கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் 01.09.2024 ஞாயிற்றுக் கிழமை அன்று காலை 10 மணி அளவில் ஆறுமுகநேரி இரயில் நிலையம் அருகில் உள்ள அன்னை எஸ்.பி.மஹாலில் அவைத் தலைவர் எஸ்.அருணாச்சலம் தலைமையில் நடைபெற உள்ளது.

மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் தலைவர் வழங்கியுள்ள அறிவுரைகளை ஏற்று கழகப் பணிகள் சிறப்புடன் நிறைவேற்றுவதற்கும் மக்களுக்கு சேவை செய்வது குறித்தும், தி.மு.கவின் பவள விழா ஆண்டில் நடைபெறவுள்ள முப்பெரும் விழா ஏற்பாடுகள் குறித்தும் முடிவுகள் எடுக்கப்பட உள்ள இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய பிரதிநிதிகள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மக்கள் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் அவசியம் பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

### தி.மு.க. மாணவர் அணி

# மாவட்ட, மாநில அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

### மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை,ஆக.29-

தி.மு.க. மாணவர் அணி மாவட்ட, மாநில அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம், வருகிற 6-9-2024 வெள்ளிக்கிழமை, காலை 11.00 மணியளவில், சென்னை, அண்ணா அறிவாலயம், "கலைஞர் அரங்கத்தில்" எனது தலைமையில், மாநில மாணவர் அணித் தலைவர் இரா.ராஜீவ் காந்தி இணைச் செயலாளர்கள் பூவை ஜெரால்டு, எஸ்.மோகன் மற்றும் துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், ரா.தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த், கா.பொன்ராஜ், வி.ஜி. கோகுல், திருமதி பூரணசங்கீதாசின்னமுத்து, திருமதி ஜெ. வீரமணி ஆகியோர் முன்னிலையில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் தமிழ்மொழி, தமிழர் பண்பாடு, தமிழர் கலை மற்றும் தமிழினத் தொன்மைகளையும் பெருமைகளையும் இளைய தலைமுறையினர் அறியும் வண்ணம் செயல்படவும், பகுத்தறிவு சுயமரியாதை சமூகநீதி சமத்துவம் ஆகிய கொள்கைகளைக் பரப்புரைச் செய்திடவும், மாணவர்களிடம் திறன் மேம்பாட்டினை உருவாக்க பயிற்சிகளை வழங்கிடவும் தி.மு.க. மாணவர் அணியின் சார்பில் கல்வி நிலையங்களில் அமைக்கப்பட உள்ள "தமிழ் மாணவர் மன்ற" சேர்க்கை விண்ணப்பப் படிவம் மற்றும் மன்ற அடையாள அட்டையினை மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்களிடம் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா, எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் வழங்கி சிறப்புரையாற்ற உள்ளார்கள்.

அதுபோது மாவட்ட, மாநில அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் மட்டும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1) கல்வி நிலையங்களில் "தமிழ் மாணவர் மன்றம்" அமைப்பு ஏற்படுத்துதல்;

2) ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் ஆகிய அமைப்புக்கான மாணவர் அணி நிர்வாகிகளுக்கான நேர்காணல் நடத்துவது - குறித்து.

இவ்வாறு கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

### புதிய கல்விக் கொள்கையை ஏற்காததால் தமிழ்நாட்டைப் பழிவாங்கும் ஒன்றிய அரசு

# தமிழ்நாட்டிற்கான கல்வி நிதி ரூ.573 கோடியை வழங்காமல் நிறுத்தி வைப்பு!

### கல்வியாளர்கள் மற்றும் பல்வேறு தரப்பினர் – ஒன்றிய பா.ஜ.க., அரசுக்கு கடும் கண்டனம்!

சென்னை, ஆக. 29 -

பள்ளிக் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் ஒன்றிய அரசின் சமக்ரா ஷிக்ஷா அபியான் திட்டம் நாடு முழுவதும் உள்ள அனைத்து மாநிலங்களிலும் பள்ளிக்கல்வித்துறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒன்றிய அரசின் 60 சதவிகித நிதியிலும், மாநில அரசுகளின் 40 சதவிகித நிதியிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 4 தவணைகளாக தனது பங்கு நிதியை ஒன்றிய அரசு மாநிலங்களுக்கு வழங்க வேண்டும். ஆனால் ஒன்றிய அரசோ இத்திட்டத்திற்கு உரிய நிதியை வழங்காமல் மாநிலங்களை இழுத்தடித்து வருகிறது.

இதனால் மாநிலங்களின் நிதியிலேயே இத்திட்டம் முழுமையாக செயல்படும் சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில், புதிய கல்விக் கொள்கையை ஏற்காத தமிழ்நாட்டை பழிவாங்கும் நோக்கில், இத்திட்டத்திற்கு தமிழ்நாட்டுக்கான நிதியை விடுவிக்காமல் ஒன்றிய அரசு அலட்சியம் காட்டி வருகிறது. இத்திட்டத்தை செயல்படுத்த தமிழ்நாட்டுக்கு 3 ஆயிரத்து 586 கோடி ரூபாய் நிதி அறிவிக்கப்பட்டது. இதில், 2 ஆயிரத்து 152 கோடி ரூபாய் ஒன்றிய அரசின் 60 சதவிகித நிதியாகும். ஆயிரத்து 434 கோடி ரூபாய் தமிழ்நாடு அரசின் 40 சதவிகித நிதியாகும். ஒன்றிய அரசின் நிதியில், முதல் கட்டமாக வழங்க வேண்டியது 573 கோடி ரூபாயாகும். ஆனால் இந்த நிதியை தமிழ்நாட்டுக்கு வழங்காமல் ஒன்றிய அரசு பழிவாங்கி வருகிறது.

இதுதொடர்பாக தமிழ்நாடு அரசு பல முறை கடிதங்கள் மூலம் வலியுறுத்தியும், ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானை தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நேரில் சந்தித்து வலியுறுத்தியும் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் தமிழ்நாடு அரசின் நிதியிலேயே ஒன்றிய அரசின் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் காரணமாக தமிழ்நாடு அரசுக்கு நிதிச் சுமை அதிகரித்துள்ளது. ஒன்றிய அரசின் செயலால், இத்திட்டத்தின் கீழ் பணியாற்றும் 15 ஆயிரம் ஆசிரியர்களுக்கு அடுத்த மாதம் ஊதியம் வழங்குவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், தமிழ்நாட்டை பழிவாங்கும் ஒன்றிய பா.ஜ.க., அரசின் செயலுக்கு கல்வியாளர்கள் உட்பட பல்வேறு தரப்பினர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். நிதியை உடனே விடுவிக்க வேண்டும் என அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.




மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் சென்னையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர் கூட்ட தீர்மான விளக்கம் செப்டம்பர் 9ஆம் தேதி மதுரை வருகை தரும் கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்கும் நிகழ்ச்சியில் மாநகர் மாவட்டம் சார்பாக பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்பது குறித்த பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் மாநகர் மாவட்ட செயலாளர் கோ தளபதி எம்.எல்.ஏ. தீர்மானத்தை விளக்கி சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் பொன் முத்துராமலிங்கம், வ.வேலுசாமி, பெ.குழந்தைவேலு, மா.ஜெயராம், தனச்செல்வம் ஒச்சு பாலு, சின்னம்மாள், மூவேந்திரன், வக்கீல் ராகவன், முருகவேல் இளைஞரணி சௌந்தர்ராஜன் மற்றும் பகுதி கழக வட்டக் கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் திரளான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### காது கேளாதோர் - வாய் பேசாதோர்

# மாணவர்களுக்கு - தொழிற்பயிற்சி நிலையங்களில் நேரடி சேர்க்கை!

### வேலைவாய்ப்பு - பயிற்சித் துறை ஆணையர் அறிவிப்பு!

சென்னை, ஆக 29-

காதுகேளாதோர் மற்றும் வாய்பேசாதோர் மாணவர்கள் மாற்றுத்திறனாளிகள் மற்றும் இதர மாணவர்களுக்கு தொழிற் பயிற்சி நிலையங் களில் (ITI) நேரடி சேர்க்கை குறித்து - வேலைவாய்ப்பு - பயிற்சித் துறை ஆணையர் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:

தமிழகத்தில் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் கீழ் 102 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 311 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் காதுகேளாதோர் மற்றும் வாய்பேசாதோர் மாணவர்களுக்காக நாகர்கோவில், உளுந்தூர்பேட்டை மற்றும் கிண்டி ஆகிய 03 அரசு தொழிற்பயிற்சி நிலையங் களில் பிரத்யேகமாக Fitter (Deaf and Dumb) என்ற தொழிற்பிரிவு இயங்கி வருகின்றன. மேலும் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்காக அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலும் 5% இடஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும் 2024-2025-ம் கல்வியாண்டிற்கான பயிற்சியாளர்களுக்கான நேரடி சேர்க்கை 16.08.2024 வரை மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில். மாணவர்களின் நலன் கருதி நேரடி சேர்க்கைக்கான கால அவகாசம் 31.08.2024 வரை தற்போது நீட்டிக்கப்பட்டுள்ளது.

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சேரும் மாணவர்களுக்கு பயிற்சிக் கட்டணம் இல்லை. கல்வி உதவித்தொகையாக மாதம் ரூ.750/- வழங்கப்படும். மேலும்,தமிழக அரசு வழங்கும் விலையில்லா மிதிவண்டி, விலையில்லா சீருடை, விலையில்லா மூடு காலணிகள் (Shoes), விலையில்லா வரைபடக் கருவிகள், கட்டணமில்லா பேருந்து வசதி இவை அனைத்தும் வழங்கப்படும்.

காதுகேளாதோர் மற்றும் வாய்பேசாதோர் மாணவர்கள் இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்தி நாகர்கோவில்,உளுந்தூர்பேட்டை மற்றும் கிண்டி தொழிற்பயிற்சி நிலையங் களுக்கு கல்விச் சான்றிதழ்களுடன் நேரில் சென்று தொழிற்பயிற்சி நிலையங்களில் சேரலாம்.

மாற்று திறனாளிகள் மற்றும் அனைத்து மாணவர்களும் இந்த வாய்ப்பை பயன்படுத்தி தாம் விரும்பும் அரசு தொழிற்பயிற்சி நிலையங் களுக்கு கல்விச் சான்றிதழ்களுடன் நேரில் சென்று தாம் விரும்பும் தொழிற்பிரிவை தேர்வு செய்து தொழிற்பயிற்சி நிலையங்களில் சேரலாம்.

இது தொடர்பாக ஏதேனும் ஐயம் ஏற்படும் நேர்வில் கீழ்காணும் அலைபேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

அலைபேசி எண் மற்றும் whatsapp எண்: 9499055689

இவ்வாறு அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.



தேனி தெற்கு மாவட்டம் ஆண்டிபட்டி தொகுதி கம்பம் ஒன்றியம் கே.கே. பட்டிபேரூர் ஹைவேஸ் பேரூர் சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. சிறப்பு உரையாற்றினார் உடன் மகாராஜன் எம் எல் ஏ. ஒன்றிய செயலாளர் தங்கபாண்டி, மாவட்ட துணை செயலாளர் செந்தில் குமார், மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர் பாண்டியன், பேரூர் செயலாளர்கள் பாஸ்கரன், கணேசன், பேரூராட்சி தலைவர் வேல்முருகன் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.